வணிக வரித் துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு த. ஜேக்கப், இ.ஆ.ப.,<br>ஆணையர் (வணிகவரி),<br>சேப்பாக்கம், சென்னை–5. | திரு அகில இந்திய செயற்கை வைர<br>உற்பத்தியாளர் மற்றும் வணிகர்கள் சங்கம்,<br>புதிய எண் 401 (ப.எண்.200),<br>பெரிய கடை விதி,<br>திருச்சிராப்பள்ளி – 620 008. |

கடித எண்/ ம.கூ.வ/39585/2007 (VCC 1261), நாள் 18.9.2007.

அய்யா,

| | |
|---|---|
| பொருள் | மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 2006 – திருவா. அகில இந்திய செயற்கை வைர உற்பத்தியார் மற்றும் வணிகர்கள் சங்கம், திருச்சி – சில தெளிவுரைகள் கேட்கப்பட்ட – விளக்கம் அளித்தல் – தொடர்பாக. |
| பார்வை | அகில இந்திய செயற்கை வைர உற்பத்தியாளர் மற்றும் வணிகர்கள் சங்கம். திருச்சி கடித நாள் 14.7.2007. |

-----

பார்வையில் குறிபிட்ட கடிதத்தின்படி அகில இந்திய செயற்கை வைர உற்பத்தியாளர்கள் மற்றம் வணிகர்கள் சங்கம், திருச்சிராப்பள்ளியின் 14.7.2007 நாளிட்ட கடிதத்தில் கேட்கப்பட்டிருந்த சந்தேகங்களுக்கான தெளிவுரைகள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | தெளிவுரை கேட்கப்பட்ட இனங்கள் | தெளிவுரை |
|---|---|---|
| 1. | தமிழ்நாட்டிற்குள் வருடத்திற்கு ரூ.10 இலட்சத்திற்கும் குறைவாக விற்பனை செய்பவர்கள் மாதாந்திர ரிட்டன் தாக்கல் செய்ய வேண்டுமா ? | தாக்கல் செய்யப்பட வேண்டியதில்லை. |
| 2. | வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்யும் போது C Form பெற வேண்டுமா ? மாதாந்திர ரிட்டன் தாக்கல் செய்ய வேண்டுமா ? C Form வாங்கிய பிறகு CST வரி உண்டா ?இல்லையா ? | செயற்கை வைர பொருட்கள் (synthetic gem) வெளி மாநிலங்களுக்கு விநியோகம் செய்யம்போது சி படிவம் தேவையில்லை. மாதாந்திர படிவம் தாக்கல் செய்ய வேண்டும். |
| 3. | செயற்கை வைர மூலப் பொருளுக்கு (synthetic gem ) வரி விலக்கு உண்டா ? இல்லையா ? வரி இருக்குமானால் எத்தனை சதவீதம் வரி ? | செயற்கை வைரப் பொருட்–களுக்கு ( synthetic gem ) அரசு ஆணை எண் 79, நாள் 22.3.2007ன்படி 1.1.2007 முதல் முன்தேதியிட்டு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. |

செயற்கை வைர மூலப் பொருட்கள் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. எனவே தெளிவுரை வழங்க இயலாது.

ஒம்./ க. சண்முகம்.
வணிக வரி ஆணையருக்காக

நகல் – செயலர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

வணிக வரி அலுவலர் (ம.கூ.வ.)